IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

STC NO.1033/2024

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | BABU |
| FATHER'S NAME | : | RAJA |
| VILLAGE | : | MULAGANGKUPPAM |
| OCCUPATION | : | SSI |
| AGE | : | 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 3rd day of MARCH 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது காட்பாடி போக்குவரத்து காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாரளாக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு காலகட்டத்தில் திருவலம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 15.11.2024 ம் தேதி காலை 8 மணிக்கு உதவி ஆய்வாளர் தேவபிரசாத் என்பவருக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி சேர்காடு அரசு மேல்நிலைபள்ளி அருகே உள்ள முட்புதருக்கு நானும், என்னுடன் முதல்நிலை காவலர் சுந்தர் மற்றும் உதவி ஆய்வாளர் ஆகியோருடன் சென்றோம். சம்பவ இடத்தில் விசாரணை செய்த போது ஆஜர் எதிரி கஞ்சா வைத்திருந்தார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் எனனுடையது தான். அது **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசர்ல் உள்ள முதலாவது கையொப்பம் எனனுடையது தான். அது **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியிடமிருந்து சொத்து கைப்பற்றும் போது அதில் கஞ்சா இருந்தது. உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யும் போது பிஎன்எஸ் சட்டபிரிவு படி வீடியோ பதிவு எடுத்தோம் என்றால் எடுக்கவில்லை. எதன் அடிப்படையில் கஞ்சா என்று கூறுகிறேன் என்றால் ரசயாண பகுப்பாய்வுக்கு அனுப்பபட்டு அந்தஅறிக்கையின்படி சொல்லுகிறேன். அந்த பகுப்பாய்வு அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யபட்டதா என்று

எனக்க தெரியாது. சொன்ன நேரம் தேதி, இடத்தில் எதிரி என்னிடம் எந்த ஒப்புதல்வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் எங்கள் கணக்கீட்டுக்காக எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு அருகே உள்ள நபர்களை விசாரித்தோம் என்றால் யாரும் முன்வரவில்லை. சம்பவம் நடந்த பள்ளி கூடத்திற்கு எதிரே கடைகள் உள்ளது. கடையின் உள்ள நபர்களை யாரையும் விசாரிக்கவில்லை. சம்பவம் உண்மையில் நடந்திருந்தால் கடையில் உள்ளவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்திருப்போம் என்றும் அது எங்களுக்கு பாதமாக இருக்கும் என்றால் சரியல்ல. எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 03.03.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.